# அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில்,


திருவேற்காடு, சென்னை 600077

e-mail: karumariamman.thiruverkadu@gmail.com Web site: www.thirukoil.tnhrce.in

Telephone No.044 - 26800487, 26800430 Fax: 044 - 26800451.


**ந.க.எண் 388/2020/ஆ4 /நாள் 21.09.2021.**

## அறிவிப்பு

சென்னை–77, திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் பல்வேறு காலிப்பணியிடங்களை நிரப்புவது குறித்து 11.02.2021 தேதியன்று தினமலர் நாளிதழ் மூலம் வெளியிடப்பட்ட அறிவிப்பு நிர்வாக காரணங்களுக்காக ரத்து செய்யப்படுகிறது என அறிவிக்கப்படுகிறது.

## வேலைவாய்ப்பு அறிவிப்பு

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டம், அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் காலியாக உள்ள கீழ்காணும் விவரப்படியான காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் தெரிவு செய்வதற்கு உரிய தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் **22.10.2021** மாலை **5.00 மணி.**

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:** இணை ஆணையர் / செயல் அலுவலர்,
அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு, சென்னை – 600077.

| வ. எண். | பதவியின் பெயர் | காலிப்பணி இடங்கள் எண்ணிக்கை | சம்பள விகிதம் ரூ.பை | பணிகளுக்கு உரிய கல்வி மற்றும் பிற தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1 | இளநிலை உதவியாளர் | 1 (ஒன்று) | அட்டவணை 1 நிலை –22 18500–58600 | 10ம் வகுப்பு தேர்ச்சி அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு இணையான கல்வித்தகுதி பெற்றிருத்தல் வேண்டும். |
| 2 | ஓட்டுநர் | 1 (ஒன்று) | அட்டவணை 1 நிலை –22 18500–58600 | 8ம் வகுப்பு அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு இணையான படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இலகுரக வாகனம் அல்லது கனரக வாகன ஓட்டுநர் உரிமமும் முதலுதவி குறித்த சான்றிதழும் பெற்றிருக்க வேண்டும் மற்றும் ஓராண்டு ஓட்டுநர் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். |
| 3 | கடைநிலை ஊழியர் | 4 (நான்கு) | அட்டவணை 1 நிலை –17 15900–50400 | 8ம் வகுப்பு தேர்ச்சி அல்லது அதற்கு இணையானதாக அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| 4 | உதவி மின்பணி | 1 (ஒன்று) | அட்டவணை 1 நிலை –18 16600–52400 | அரசு அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற ITI நிறுவனங்களில் எலக்ட்ரிக்கல்/ வயர்மேன் படிப்பில் சான்றுப் பெற்றிருக்கவேண்டும். எலக்ட்ரிக்கல் லைசன்சிங் போர்டால் வழங்கப்பெறும் H சான்று பெற்றிருக்க வேண்டும். |
| 5 | அம்மன் மடப்பள்ளி | 1 (ஒன்று) | அட்டவணை 1 நிலை –17 15900–50400 | தமிழில் எழுத படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் மற்றும் கோயில்களின் வழக்கங்களுக்கேற்ப நெய்வேத்தியம் மற்றும் பிரசாதம் தயாரிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| 6 | பரிச்சாரகர் | 1 (ஒன்று) | அட்டவணை –1 நிலை –17 15900–50400 | தமிழில் படிக்கவும் எழுதவும் அறிந்திருக்க வேண்டும் மற்றும் கோயிலின்பழக்க வழக்கத்திற்கேற்ப நைவேத்தியம் மற்றும் பிரசாதம் தயாரிக்க தெரிந்திருக்க வேண்டும் மற்றும் பூஜை மற்றும் சடங்குகளை நடத்துவதற்கான வழக்கமான நடைமுறைகளை அறிந்திருக்க வேண்டும். |
| 7 | பெருமாள் கோயில் மடப்பள்ளி | 2 (இரண்டு) | அட்டவணை 1 நிலை –17 15900–50400 | தமிழில் எழுத படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். திருக்கோயிலில் நடைபெறும் பூஜை முறைகள் மற்றும் நைவேத்தியம் தயாரித்தல் இவற்றில் திருக்கோயிலின் பழக்க, வழக்கம் மற்றும் நடைமுறைகள் தெரிந்திருக்கவேண்டும். பிரசாதம் தயாரித்தல் தெரிந்திருக்க வேண்டும். முன் அனுபவம் விரும்பத்தக்கது. |
| 8 | ஒத்து | 1 (ஒன்று) | அட்டவணை 1 நிலை –22 18500–58600 | தமிழில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும் மற்றும் யாதொரு சமய நிறுவனங்கள் அல்லது அரசு நிறுவனங்கள் அல்லது ஏனைய யாதொரு அரசால் அங்கீகரிக்கப்பட்ட யாதொரு நிறுவனங்களால் நடத்தப்படும் இசைப்பள்ளிகளிலிருந்து இது தொடர்புடைய துறையில் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |
| 9 | தாளம் | 1 (ஒன்று) | அட்டவணை 1 நிலை –22 18500–58600 | |
| 10 | டமாரம் | 1 (ஒன்று) | அட்டவணை 1 நிலை 22 11600–36800 | தமிழில் எழுத படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். அரசு அல்லது அரசு சார்ந்த அல்லது இந்து சமயம் சார்ந்த நிறுவனங்களால் வழங்கப்பெற்ற தொடர்புடைய சான்று பெற்றிருத்தல் வேண்டும். முன் அனுபவம் விரும்பதக்கது. |
| 11 | திருசின்னம் | 1 (ஒன்று) | அட்டவணை 1 நிலை 12 11600–36800 | |
| 12 | முடிகொட்டகை மேஸ்திரி | 1 (ஒன்று) | அட்டவணை 1 நிலை –17 15900–50400 | தமிழில் எழுத படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | குழாய் பராமரிப்பாளர் | 1 (ஒன்று) | அட்டவணை 1 நிலை 16 15700–50000 | அரசு அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற ITI நிறுவனங்களில் பிளம்பர் படிப்பில் சான்றுப் பெற்றிருக்கவேண்டும். 2 வருடம் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் அல்லது இரண்டு ஆண்டுகள் அப்பரண்டிஸ் முடித்திருக்க வேண்டும். |
| 14 | தமிழ்புலவர் | 1 (ஒன்று) | அட்டவணை –1 நிலை –22 18500–58600 | பல்கலைகழகத்தால் வழங்கப்பெற்ற தமிழ் இளங்கலை BLit., அல்லது B.A., அல்லது தமிழில் முதுநிலை M.A., அல்லது MLit., பட்டம் பெற்றிருக்க வேண்டும். திருமுறைகள் பாராயணம் (Reciting) தெரிந்திருக்க வேண்டும். |

**உபகோயில், அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில், திருவேற்காடு**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | அர்ச்சகர் | 1(ஒன்று) | அட்டவணை 1 நிலை –12 11600–36800 | தமிழில் எழுதபடிக்கத்தெரிந்திருக்க வேண்டும். இந்து சமய நிறுவனங்கள் அல்லது பிற நிறுவன ஆகம பாடசாலையில் ஓராண்டு பயின்று சான்று பெற்றிருக்க வேண்டும். ஆகம விதிகள் அனைத்தும் அறிந்திருக்க வேண்டும். |
| 2 | ஓதுவார் | 1(ஒன்று) | அட்டவணை –1 நிலை – 13 12600–39900 | தமிழில் எழுதபடிக்கத் தெரிந்திருக்க வேண்டும். அரசு அல்லது அரசு சார்ந்த அல்லது பிற நிறுவனங்களில் தேவார பாடசாலையில் குறைந்தபட்சம் 3 வருடம் பயின்று சான்று பெற்றிருக்க வேண்டும். |
| 3 | பரிச்சாரகர் | 1(ஒன்று) | அட்டவணை –1 நிலை –12 11600–36800 | தமிழில் எழுத படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். திருக்கோயிலில் நடைபெறும் பூஜை முறைகள் மற்றும் நைவேத்தியம் தயாரித்தல் இவற்றில் திருக்கோயிலின் பழக்க, வழக்கம் மற்றும் நடைமுறைகள் தெரிந்திருக்கவேண்டும். பிரசாதம் தயாரித்தல் தெரிந்திருக்க வேண்டும். முன் அனுபவம் விரும்பத்தக்கது. |

**உபகோயில், அருள்மிகு ஊன்றீஸ்வரர் திருக்கோயில், பூண்டி கிராமம், திருவள்ளூர் மாவட்டம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | அர்ச்சகர் | 1(ஒன்று) | அட்டவணை –1 நிலை –12 11600–36800 | தமிழில் எழுதபடிக்கத்தெரிந்திருக்க வேண்டும். இந்து சமய நிறுவனங்கள் அல்லது பிற நிறுவன ஆகம பாடசாலையில் ஓராண்டு பயின்று சான்று பெற்றிருக்க வேண்டும். ஆகம விதிகள் அனைத்தும் அறிந்திருக்க வேண்டும். |
| 2 | இரவுக்காவலர் | 1(ஒன்று) | அட்டவணை –1 நிலை 12 11600–36800 | தமிழில் எழுத மற்றும் படிக்க தெரிந்திருக்க வேண்டும். |

**நிபந்தனைகள்:** (1) விண்ணப்பதாரர் 01.09.2021 அன்று 18 வயது பூர்த்தியடைந்தவராகவும், 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (2) விண்ணப்பதாரர் தமிழில் நன்கு எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். மேலும், இந்து மதத்தை சார்ந்தவராகவும், இறை நம்பிக்கை உடையவராகவும் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். (3) விண்ணப்பத்துடன் கல்வித்தகுதிக்குரிய சான்றிதழ் மற்றும் பிற ஆவணங்களுக்கு ஜெராக்ஸ் நகல் மட்டுமே அனுப்பப்பட வேண்டும். அசல் சான்றிதழ் எக்காரணத்தினை முன்னிட்டும் அனுப்பக்கூடாது. அசல் சான்றிதழ் நேர்முகத்தேர்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். (4) மேற்கண்ட பணியிடங்களுக்கு பணியிடம் சம்மந்தமாக நேர்முகத்தேர்வு நடத்தப்படும். (5) பல்வேறு பணிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் உடல் தகுதி சான்று பெற்று அதன் நகலுடன் விண்ணப்பிக்க வேண்டும். (6) மேலும், மேற்கண்ட பணிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கூடுதல் தகுதி என்பது இத்திருக்கோயிலின் காலகாலமாக பின்பற்றி, பணியாற்றி வந்த விவரங்களின் அடிப்படையிலேயே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (7) நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள், நன்னடத்தைக்காகவோ அல்லது அமைதியை காப்பற்றவோ ஜாமீனில் கட்டுப்படுத்தப்பட்டவர்கள், பட்டகடனை தீர்க்க முடியவில்லை என நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள், அரசு பணியிலிருந்தும், இதர நிறுவனங்களிலிருந்தும், திருக்கோயில்களிலிருந்தும், விலக்கப்பட்டவர்கள் திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள் போன்றோர் விண்ணப்பிக்க தகுதி அற்றவர்கள். (8) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய **கடைசி நாள்: 22.10.2021 மாலை. 5.00 மணி.** (9) நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாளுக்குப் பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது. மேலும் தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்று கொள்ளப்படும். (10) வரப்பெறும் விண்ணப்பங்களை ஏற்கவோ நிராகரிக்கவோ திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமையுண்டு.

**செ.ம.தொ.இ/842/வரைகலை/2021** **இணை ஆணையர் / செயல் அலுவலர்/தக்கார்**

**"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."**